புதுயுகம்

ஸ்ரீராம் இலக்கியக் கழகம்

145, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004, தொ. பே: 044-4021 4100

திருக்குறள் விழா 2025

# மாணவர்களுக்கான பேச்சு, ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகள்

**அன்புடையீர்**

ஸ்ரீராம் இலக்கியக் கழகம், கடந்த 1988 ஆம் ஆண்டு முதல் 'திருக்குறள் விழா'வினை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறது.

இவ்விழாவின் ஒரு பகுதியாக, மாணவர்களிடையே திருக்குறளின் கருத்துக்களைப் பரப்பவும், பேச்சாற்றலைப் பெருக்கவும், வரையும் திறனை வெளிப்படுத்தவும், எழுத்தார்வத்தைத் தூண்டவும் மாநில அளவில் பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்துகிறது.

இப்போட்டிகள், நடப்பாண்டில் ஜூலை – ஆகஸ்ட் மாதங்களில் – சென்னை, வேலூர், தாம்பரம், புதுச்சேரி, சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர், கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய 12 மையங்களில் நடைபெறவுள்ளன. இடைநிலை, மேல்நிலை, கல்லூரி ஆகிய மூன்று பிரிவுகளில் இவை நடத்தப்படும். இந்நிகழ்வுக்கு ஊடகப் பங்குதாரராக கைகோர்த்துள்ள புதுயுகம் தொலைக்காட்சி, நவம்பர் 2025 முதல் ஜனவரி 2026 வரை இந்நிகழ்ச்சியை தொலைக்காட்சி மற்றும் யூ-டியூபில் ஒளிபரப்பும்.

## பேச்சுப் போட்டி நடத்தப்படும் முறை

ஒவ்வொரு பிரிவிலும் (இடைநிலை / மேல்நிலை / கல்லூரி) மாணவ, மாணவியருக்கு கீழ்க்காணும் முறையில் போட்டிகள் நடத்தப்படும்.

- பேச்சுப் போட்டியின் கால் இறுதிச் சுற்றானது, காலை 10.30 மணி முதல் பகல் 12.30 மணி வரை நடைபெறும். இதில் பங்கு பெறும் மாணவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, வேறுவேறு வகுப்பறைகளில் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்வர். அங்கு ஒவ்வொரு மாணவருக்கும் தலா 5 நிமிடங்கள் பேச வாய்ப்பளிக்கப்படும். ஒவ்வொரு வகுப்பறையிலும் முதல் இரண்டு போட்டியாளர்கள் அரையிறுதிச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்படுவர்.

- பேச்சுப் போட்டியின் கால் இறுதிச் சுற்றில் வென்றோர், அரை இறுதிச் சுற்றிலும் அதே தலைப்பில் பேசலாம்.

- அரை இறுதிச் சுற்றானது, பகல் 1 மணி முதல் 2 மணி வரை நடைபெறும். போட்டியில் வென்றோர் விவரம், பகல் 2.30 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு விழாவின்போது தெரிவிக்கப்படும். அரை இறுதிச் சுற்றில் முதல் இடம் பெறுபவர், சென்னையில் நடக்கும் இறுதிச் சுற்றுக்கு அழைக்கப்படுவார். அரை இறுதிச் சுற்றில் பங்கேற்கும் அனைவருக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

- இறுதிச் சுற்றில், ஒவ்வொரு மையத்திலும், ஒரு பிரிவிற்கு தலா ஒருவர் வீதம், 12 மையங்களிலிருந்து முகிழ்த்தெழும் 12 போட்டியாளர்கள் கலந்து கொள்வர். அவர்களில் இருந்து மூன்று பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

- ஒவ்வொரு பிரிவிலும் மாநில அளவில் முதல் பரிசு பெறும் மாணவருக்கு ரூ. 15,000, இரண்டாம் பரிசு பெறும் மாணவருக்கு ரூ. 10,000, மூன்றாம் பரிசு பெறும் மாணவருக்கு ரூ. 7,500 ஆகிய பணப் பரிசுகளும், கோப்பைகளும் வழங்கப்படும்.

- கருத்து, வெளியிடும் பாங்கு, உச்சரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மாணாக்கர்களின் பேச்சு மதிப்பீடு செய்யப்படும்.

- போட்டியின் போது மாணவர்கள் குறிப்புகளைப் பயன்படுத்தக் கூடாது.

- ஆசிரியர்கள், ஒரே உரையைத் தயாரித்து பல மாணவர்களுக்கு கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

## ஓவியப் போட்டி நடத்தப்படும் முறை

ஓவியப் போட்டிகள், ஒரே சுற்றாக மண்டல அளவில் மட்டுமே நடத்தப்படும். தோராயமாக, காலை 10.30 மணி முதல் பகல் 12 மணி வரை 90 **நிமிடங்கள்** நடைபெறும்.

- ஸ்ரீராம் இலக்கியக் கழகம், A3 அளவுள்ள வரைபடத் தாளை வழங்கும். பென்சில், வண்ணம் உள்ளிட்ட - ஓவியம் வரைவதற்கு தேவைப்படும் அனைத்துப் பொருள்களையும் போட்டியாளர்களே கொண்டு வரவேண்டும்.

- பென்சில், வாட்டர் கலர், சார்க்கோல், ஸ்கெட்ச் என எல்லாவிதமான ஓவியங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

- ஜிகினா, வண்ணப் பொடி, பூ, ஸ்டிக்கர் பொட்டு என எந்த உபரிப் பொருளையும் ஓவியத்தில் பயன்படுத்தக்கூடாது.

- ஓவியங்கள், தலைப்பின் உட்கருத்தைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

- மாணவர்கள், மாடல் ஓவியங்களைப் பார்க்காமல் வரைய வேண்டும்.

- கருத்து, வண்ணங்களைப் பயன்படுத்தும் விதம், வெளிப்படுத்தும் பாங்கு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

- போட்டியில் வென்றோர் விவரம், பகல் 2.30 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு விழாவின்போது தெரிவிக்கப்படும்.

- முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு பெறும் மாணவர்களுக்கு கேடயமும், ஆறுதல் பரிசுகள் பெறும் மாணவர்களுக்கு நூல்களும் வழங்கப்படும்.

## கட்டுரைப் போட்டி நடத்தப்படும் முறை

- கட்டுரைப் போட்டிகளும் ஒரே சுற்றாக, மண்டல அளவில் மட்டுமே நடத்தப்படும். தோராயமாக, காலை 10.30 மணி முதல் 12 மணி வரை 90 நிமிடங்கள் இப்போட்டி நடைபெறும்.
- மாணவர்கள் அதிகபட்சமாக 12 பக்கங்கள் வரை கட்டுரையை எழுதலாம்.
- கட்டுரைக்கான தாள்களை ஸ்ரீராம் இலக்கியக் கழகம் வழங்கும். அட்டை, பேனா, பென்சில் போன்ற பொருள்களை மாணவர்களே கொண்டு வர வேண்டும்.
- கருத்து, உரைநடை, வெளிப்படுத்தும் பாங்கு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும் .
- குறிப்புகளைப் பார்க்காமல், மாணவர்கள் கட்டுரையை எழுத வேண்டும்.
- போட்டியில் வென்றோர் விவரம் பகல் 2.30 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு விழாவின் போது தெரிவிக்கப்படும்.
- முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு பெறும் மாணவர்களுக்கு கேடயமும், ஆறுதல் பரிசுகள் பெறும் மாணவர்களுக்கு நூல்களும் வழங்கப்படும்.

### விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி :

- **சென்னை, வேலூர் மையங்களில் பங்கேற்போருக்கு - 5 ஜூலை 2025**
- **தாம்பரம், புதுச்சேரி மையங்களில் பங்கேற்போருக்கு - 12 ஜூலை 2025**
- **சேலம், திருச்சி மையங்களில் பங்கேற்போருக்கு - 19 ஜூலை 2025**
- **மதுரை, திருநெல்வேலி மையங்களில் பங்கேற்போருக்கு - 26 ஜூலை 2025**
- **தஞ்சாவூர், திருவாரூர் மையங்களில் பங்கேற்போருக்கு - 2 ஆகஸ்ட் 2025**
- **கோவை, ஈரோடு மையங்களில் பங்கேற்போருக்கு - 16 ஆகஸ்ட் 2025**

நீங்கள் எந்த மையத்தில் பங்கேற்றாலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **"ஸ்ரீராம் இலக்கியக் கழகம், # 145, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004"** என்ற தலைமை அலுவலக முகவரிக்கே அனுப்ப வேண்டும்.

ஏதேனும் ஐயம் இருப்பின் 044 - 2822 0008 என்ற தொலைபேசி எண்ணில், காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

## முதல் சுற்றுப் போட்டிகள் நடைபெறும் இடங்கள்:

| நகரம் | நாள் | இடம் |
|---|---|---|
| சென்னை | 12-07-2025 சனி | சி.எஸ்.ஐ. ஜெஸ்ஸி மோசஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, 37 / Z - 183, 5-வது அவென்யூ, (ப்ளூ ஸ்டார் பேருந்து நிறுத்தம் அருகில்), அண்ணா நகர், சென்னை – 600 040. தொ.பே.: 044 – 2626 6739. |
| வேலூர் | 13-07-2025 ஞாயிறு | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, இன்ஃபேன்டரி சாலை, வசந்தபுரம், கொசப்பேட்டை, வேலூர் – 632 001. தொ.பே.: 73391 91858. |
| தாம்பரம் | 19-07-2025 சனி | கிறிஸ்து ராஜா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, 28, வேளச்சேரி மெயின் ரோடு, கிழக்கு தாம்பரம், (எம்.சி.சி. அருகில்), சென்னை – 600 059. தொ.பே.: 044 – 2239 5002. |
| புதுச்சேரி | 20-07-2025 ஞாயிறு | செயின்ட் ஆண்டனி’ஸ் உயர்நிலைப் பள்ளி, சி - 115, மறைமலை அடிகள் சாலை, புதுச்சேரி - 605 001. தொ.பே.: 0413 - 220 3254. |
| சேலம் | 26-07-2025 சனி | பாலபாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மரவனேரி பிரதான சாலை, சேலம் – 636 007. தொ.பே.: 0427 – 2902 021. |
| திருச்சி | 27-07-2025 ஞாயிறு | இ. ஆர். மேல்நிலைப் பள்ளி, திருச்சி சாலை, மேலசிந்தாமணி, (அண்ணா சிலை அருகில்), திருச்சி – 620 002. தொ.பே.: 0431 – 2703 096. |
| மதுரை | 02-08-2025 சனி | மதுரைக் கல்லூரி, டி.பி.கே. ரோடு, மதுரை - 625 011. தொ.பே.: 0452 – 2673 354. |
| திருநெல்வேலி | 03-08-2025 ஞாயிறு | சாஃப்டர் மேல்நிலைப் பள்ளி, எஸ். என். நெடுஞ்சாலை, திருநெல்வேலி – 627 001. தொ.பே.: 0462 – 2330 885. |
| தஞ்சாவூர் | 09-08-2025 சனி | பாரத் அறிவியல் மற்றும் மேலாண்மை கல்லூரி, புதிய பேருந்து நிலையம் அருகில், திருச்சி சாலை, தஞ்சாவூர் – 613 005. தொ.பே.: 04362 – 228 081. |
| திருவாரூர் | 10-08-2025 ஞாயிறு | சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, 1/1, வடக்கு வடம்போக்கி தெரு, தேரடி அருகில், திருவாரூர் – 610 001. தொ.பே.: 04366 – 240 777 / 04366 – 240 888. |
| கோயம்புத்தூர் | 23-08-2025 சனி | சபர்பன் மேல்நிலைப் பள்ளி, 58, ராஜாஜி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் – 641 009. தொ.பே.: 0422 – 2231 432. |
| ஈரோடு | 24-08-2025 ஞாயிறு | செங்குந்தர் மேல்நிலைப் பள்ளி, 161, மீனாட்சி சுந்தரனார் சாலை, தில்லை நகர் கேட், ஈரோடு – 638 001. தொ.பே.: 0424 – 2258 245. |

Powered By: SHRIRAM Group
EMPOWERING PEOPLE THROUGH PROSPERITY

| ஸ்ரீராம் சிட்ஸ் அலுவலகங்களின் தொலைபேசி எண்கள் | | |
|---|---|---|
| சென்னை | : | 044 – 4021 4100 / 4210 2114 |
| வேலூர் | : | 0416 – 2216 531 / 99429 90579 |
| தாம்பரம் | : | 044 – 4203 4609 / 99429 90768 |
| புதுச்சேரி | : | 0413 – 2223 123 |
| கோயம்புத்தூர் | : | 0422 – 4326 912 / 4378 235 |
| ஈரோடு | : | 0424 – 2250 277 / 2250 288 |
| சேலம் | : | 0427 – 4047 501 / 4047 502 |
| திருச்சி | : | 0431 – 4210 130 / 4026 996 |
| தஞ்சாவூர் | : | 0436 – 2278 138 / 98658 87279 |
| திருவாரூர் | : | 04366 – 224 565 |
| திருநெல்வேலி | : | 0462 – 4220 646 / 98658 87568 |
| மதுரை | : | 0452 – 4372 145 |

SHRIRAM Chits
EMPOWERING PEOPLE THROUGH PROSPERITY

# பேச்சுப் போட்டிக்கான தலைப்புகள்

நேரம் : **5** மணித்துளிகள்

இடைநிலைப் பிரிவு (வகுப்புகள் 6,7,8)

***பழியஞ்சிப் பாத்துஊண் (44)***
அல்லது
***அறிவுஅற்றம் காக்கும் கருவி (421)***
அல்லது
***பேணித் தமராக் கொளல் (443)***
அல்லது
***பேதையின் பேதையார் இல் (834)***

மேல்நிலைப் பிரிவு (வகுப்புகள் 9,10,11,12)

***செய்யற்க செய்யின் (205)***
அல்லது
***வெகுளாமை நன்று (308)***
அல்லது
***சிறுபடையான் செல்லிடம் (498)***
அல்லது
***கள்ஒற்றிக் கண்சாய் பவர் (927)***

கல்லூரிப் பிரிவு

***செய்யாமை யானும் கெடும் (466)***
அல்லது
***தலைமக்கள் இல்வழி இல் (770)***
அல்லது
***தெய்வம் மடிதற்றுத் தான்முந் துறும் (1023)***
அல்லது
***சுற்றமாச் சுற்றும் உலகு (1025)***

## ஓவியப் போட்டிக்கான தலைப்புகள்

நேரம் : **90** மணித்துளிகள்

இடைநிலைப் பிரிவு (வகுப்புகள் 6,7,8)

***வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்(50)***

அல்லது

***கண்ணென்ப வாழும் உயிர்க்கு (392)***

அல்லது

***செய்க பொருளை (759)***

மேல்நிலைப் பிரிவு (வகுப்புகள் 9,10,11,12)

***கற்றில னாயினுங் கேட்க (414)***

அல்லது

***வேந்துஅமைவு இல்லாத நாடு (740)***

அல்லது

***தொழுதகை யுள்ளும் (828)***

கல்லூரிப் பிரிவு

***வற்றல் மரம்தளிர்த்து அற்று (78)***

அல்லது

***வேந்தர்க்கு ஒளி (390)***

அல்லது

***உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் (1033)***

## கட்டுரைப் போட்டிக்கான தலைப்புகள்

நேரம் : **90** மணித்துளிகள்

இடைநிலைப் பிரிவு (வகுப்புகள் 6,7,8)

***நோயின்மை வேண்டு பவர் (320)***

அல்லது

***பற்றுக பற்று விடற்கு (350)***

அல்லது

***வினைவலியும் தன்வலியும் (471)***

மேல்நிலைப் பிரிவு (வகுப்புகள் 9,10,11,12)

***மேலுலகம் இல்லெனினும் (222)***

அல்லது

***கெட்டான் எனப்படுதல் நன்று (967)***

அல்லது

***பண்புஇலான் பெற்ற பெருஞ்செல்வம் (1000)***

கல்லூரிப் பிரிவு

***அதனின் அதனின் இலன் (341)***

அல்லது

***நல்லார் தொடர்கை விடல் (450)***

அல்லது

***அறிவுடையார் ஏது இன்மை (816)***

Powered By: SHRIRAM Group
EMPOWERING PEOPLE THROUGH PROSPERITY

# விதிமுறைகள்

- போட்டிகளில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள், இத்துடன் இணைத்துள்ள விண்ணப்பப் படிவத்தின் முதல் பகுதியை பூர்த்தி செய்து, ஸ்ரீராம் இலக்கியக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.
- இவ்விண்ணப்பப் படிவத்தின் இரண்டாம் பகுதியாக இணைக்கப்பட்டுள்ள அனுமதிச் சீட்டை மாணவர்கள் கத்தரித்து, பூர்த்தி செய்து போட்டிக்கு நேரில் வரும்போது தவறாமல் கொண்டு வர வேண்டும்.
- இப்போட்டிகளில், ஒவ்வொரு பள்ளி / கல்லூரியில் இருந்தும் எவ்வளவு மாணவர்கள் வேண்டுமானாலும், கலந்து கொள்ளலாம். ஆனால், ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக விண்ணப்பப் படிவத்தை நகல் எடுத்து, பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
- மூன்று போட்டிகளும் ஒரே நேரத்தில் நடக்கவிருப்பதால், ஒரு மாணவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் பங்கேற்க இயலாது.
- அரசு அங்கீகாரம் பெறாத கல்வி நிலைய மாணவர்கள், தொலைதூரக் கல்வி மாணவர்கள், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் இதில் கலந்து கொள்ள இயலாது.
- ஒரு பள்ளி / கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், ஏதேனும் ஒரு மையத்தில் மட்டுமே கலந்து கொள்ளலாம். வேறுவேறு மையங்களில் கலந்து கொள்ளக் கூடாது. உதாரணமாக, காஞ்சிபுரம் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் சென்னை அல்லது தாம்பரம் அல்லது வேலூரில் கலந்து கொள்ளலாம். சிலர் இங்கும், சிலர் அங்குமாகக் கலந்து கொள்ளக் கூடாது. மையத்தைத் தேர்வு செய்வது அக்கல்வி நிறுவனத்தின் விருப்பம்.
- மேலும் ஒரு மையத்தில் பங்கேற்ற மாணவர், மீண்டும் இன்னொரு மையத்தில் பங்கேற்கக் கூடாது.
- போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் காலை 9.30 மணிக்குள் போட்டி நடைபெறும் மையத்திற்கு வரவேண்டும்.
- போட்டி நடைபெறும் அறைகளுக்குள் பெற்றோர், ஆசிரியர்களுக்கு அனுமதி இல்லை.
- போட்டியில் பங்கேற்க நுழைவுக் கட்டணம் எதுவும் கிடையாது.
- போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
- போட்டியில் பங்கேற்க வரும் மாணவர்களுக்கு பயணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.
- விதிமுறைகளைப் பின்பற்றாத மாணவர்கள் போட்டியில் இருந்து நீக்கப்படுவர்.
- மதிய உணவை மாணவர்களே கொண்டு வரவேண்டும்.

புதுயுகம்
ஸ்ரீராம் இலக்கியக் கழகம்

# திருக்குறள் விழா 2025

145, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004, தொ. பே: 044-4021 4100

**முதல் பகுதி**

## பேச்சுப் போட்டி / ஓவியப் போட்டி / கட்டுரைப் போட்டிக்கான விண்ணப்பப் படிவம்

மாணவரின் பெயர்.................................................................வகுப்பு..................

தாய் / தந்தை கைபேசி எண்..................................................................................

பள்ளி / கல்லூரி முகவரி..........................................................................................

.......................................................................................................................

...............................................................................

பின் கோடு.............................................தொலைபேசி...........................................

பங்கேற்க விரும்பும் போட்டி: ☐ பேச்சு ☐ ஓவியம் ☐ கட்டுரை

கலந்து கொள்ளும் பிரிவு: ☐ இடைநிலை (6,7,8 வகுப்புகள்) ☐ மேல்நிலை (9,10,11,12 வகுப்புகள்) ☐ கல்லூரி

கலந்து கொள்ளும் மையம்:

| | | |
|---|---|---|
| ☐ சென்னை | ☐ வேலூர் | ☐ தாம்பரம் |
| ☐ புதுச்சேரி | ☐ சேலம் | ☐ திருச்சி |
| ☐ மதுரை | ☐ நெல்லை | ☐ தஞ்சாவூர் |
| ☐ திருவாரூர் | ☐ கோவை | ☐ ஈரோடு |

...........................................................................  ....................................................

தலைமை ஆசிரியர் / முதல்வர் கையொப்பம் (பள்ளி / கல்லூரி முத்திரையுடன்) — மாணவர் கையொப்பம்

**கீழ்க்காணும் அனுமதிச் சீட்டை, மாணவர்கள் பூர்த்தி செய்து, கத்தரித்து வைத்துக் கொண்டு போட்டிக்கு வரும்போது தவறாமல் கொண்டு வரவேண்டும்**

---

புதுயுகம்
ஸ்ரீராம் இலக்கியக் கழகம்
திருக்குறள் விழா 2025
145, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004, தொ. பே: 044-4021 4100

**இரண்டாம் பகுதி**

## அனுமதிச் சீட்டு

☐ **பேச்சுப் போட்டி** ☐ **ஓவியப் போட்டி** ☐ **கட்டுரைப் போட்டி**

☐ **இடைநிலை** (6,7,8 வகுப்புகள்) ☐ **மேல்நிலை** (9,10,11,12 வகுப்புகள்) ☐ **கல்லூரி**

**பெயர்........................................................................நேரம் : காலை 9.30 மணி**

**பள்ளி / கல்லூரி**...............................................................................................

.......................................................................................................................

Powered By: SHRIRAM Group
EMPOWERING PEOPLE THROUGH PROSPERITY